4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

திருத்தணி நகராட்சி, வீட்டுமனைப் பட்டா வழங்குதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கடந்த 15 வருடங்களாகக் ஒரே கேள்வியை கேட்டுக்கொண்டிருக்கிறார். 2004–ல் கடுமையான வறட்சி. வேலூர் மாவட்டத்திற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பத்து கோடி ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கினார்கள். அப்போதும் எழுந்து காட்பாடி தொகுதிக்கு அது cover ஆகுமா என்றார். வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட துதான் காட்பாடி தொகுதி. காட்பாடி தொகுதியில் இருக்கக்கூடிய மக்கள், என்னுடைய மக்கள்தான், அவர்களுக்கும் நான்தான் முதலமைச்சர் என்று சொல்லி, அன்றைக்கே இந்தப் பதிலைச் சொன்னார்கள். நேற்றையதினமும் அதேபோல் கேட்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று என்ன கேட்கிறார் என்றால், கல்லூரிகள் எல்லாம் எதிர்க்கட்சிகளுக்குத் தரமாட்டீர்களா என்கிறார். சென்ற முறை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரும்பாக்கத்தில் ஒரு கல்லூரியை அறிவித்தார்கள். அந்தப் பெரும்பாக்கம் பகுதிக்கு, சட்டமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர். ஆக, எந்தக் கட்சி என்று பார்க்க மாட்டார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து, அவருடைய ஆட்சிதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எதிர்க்கட்சி என்று பார்க்கமாட்டார்கள். தமிழகத்தில் உள்ள அத்தனை மக்களுக்கும் தான்தான் முதலமைச்சர் என்று சொல்லியவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவருடைய வழியில் வந்தவர்தான் இன்றைக்கு முதலமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். 15 வருடங்களாகப் புரியாமல் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே மாதிரியான கேள்வியைக் கேட்டுக்கொண்டேயிருக்கிறார் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். ஆகவே, அவருடைய அந்த எண்ணங்கள் அவரை விட்டு விலக வேண்டும். என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.